

பாடம் 13 — செப்டம்பர் 21–27

# பணிவிடைசெய்கிற சமுதாயம்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *2கொரி 2:14-16; யாத் 32:1-14; 1பேதுரு 2:12; பிலி 2:15; எபே 2:19; எபி 10:23-25.*

**மனன வசனம்:** நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனி(ப்போம்). எபி 10:23,24.

கிறிஸ்தவ ஊழியக்கட்டளையை நிறைவேற்றுவதில், விசுவாசிகளின் ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாயமாகத் திகழ்கிற திருச்சபையின் ஆற்றலைக் குறைத்துமதிப்பிடக்கூடாது. அநியாயத்திற்கும் தரித்திரத்திற்கும் தீர்வுகாண முயலும்போது நாம் சந்திக்கவேண்டிய சவால்கள் பற்றி ஏற்கனவே பார்த்தோம். விசுவாச சமுதாயத்தாரான சகவிசுவாசிகளுடன் சேர்ந்து ஊழியம்செய்யும்போது, நம்மைச் சுற்றிலுமுள்ளோருக்கு ஆசீர்வாதமாக விளங்கலாம்.

சபையாகச் சேர்ந்து பணிசெய்யும்போது, சபை வளர்ச்சிதான் முக்கியமாகத் தெரிகிறது; மக்களுக்குச் சேவைசெய்வதே சபையின் நோக்கமென்பது மறந்துவிடுகிறது. சுற்றிலும் காணப்படும் உபத்திரவத்தையும் தீமையையும் சபையார் அறிந்திருக்கவேண்டும். கிறிஸ்துதான் அதில் நமக்கு முன்மாதிரி. ஊழியக்கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டும்; அதேசமயத்தில் ஒடுக்கப்பட்டோருக்கும் பசியோடிருப்பவர்களுக்கும் வஸ்திரமில்லாதோருக்கும் ஆதரவேற்றோருக்கும் உதவவேண்டும்.

சபைமக்களும் அமைப்பும் சேர்ந்ததுதான் கிறிஸ்துவின் சரீரம். 1கொரி 12:12-20. இயேசுவைப்போல வாழ்ந்து, தேடிச்செல்கிற சமுதாயமாகவும், இயேசுவின் கைகளாகவும் கால்களாகவும் குரலாகவும் இருதயமாகவும் சேவைசெய்யவேண்டும்.

*2019, செப்டம்பர் 28 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# மாற்றத்தின் முகவர்கள்

ஆதிகாலக்கிறிஸ்தவ விசுவாசிகள் முற்றிலும் வித்தியாசமான ஒரு சமுதாயத்தை உருவாக்கினார்கள். தங்கள் மத்தியிலிருந்த எளியவர்கள்மேல் அக்கறைகாட்டினார்கள்; தங்களுக்கு வெளியேயிருந்த எளியவர்களுக்கும் உதவினார்கள். தங்கள்மத்தியில் தேவன் செய்து வந்த கிரியைகளில் பங்குபெற அவர்களை அழைத்தார்கள். அப்போஸ்தலரின் முதல் சில அதிகாரங்களில் இதைப் பார்க்கிறோம்.

உலகத்தில் சபையானது உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டுமென இயேசு சொன்னார். பவுல், வேறுபல உவமைகளைப் பயன்படுத்துகிறார். ஜீவபலி (ரோமர் 12:1), கிறிஸ்துவின் சரீரம் (1கொரி 12:12-20), ஸ்தானாபதிகள் (2கொரி 5:18-20), நற்கந்தம் (2கொரி 2:14-16) போன்ற வார்த்தைகளால் தேவமக்களைச் சுட்டிக்காட்டுகிறார். மாபெரும் போராட்டத்தால் சிதைந்துபோன ஓர் உலகில் நாம் வாழ்ந்தாலும், நாம் தேவராஜ்யத்தின் பிரதிநிதிகள் அல்லது முகவர்களாக இருப்பதை இந்த உவமைகள் ஒவ்வொன்றும் காட்டுகின்றன.

**கேள்வி: நீங்கள் வாழ்கிற பகுதியில் தேவனையும் அவருடைய வழிகளையும் என்னென்ன வழிகளில் பிரதிபலிக்க விரும்புகிறீர்கள்? ஏன்? இந்த உவமைகளில் எது மிகச்சிறப்பாக அதை எடுத்துக்காட்டக்கூடியது?**

இந்த உவமைகளில் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட செயலைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த உவமைகள் சுட்டிக்காட்டுகிறபடி நடப்பது தேவன் நம்மை ஏற்றுக்கொள்வதற்காக அல்ல; கிறிஸ்துவின் தியாகத்தால் தேவன் நம்மை ஏற்கனவே ஏற்றுக்கொண்டார். தேவனுடைய அந்த அன்பையும் கிருபையையும் உணர்ந்தவர்களாக, மடிந்துகொண்டிருக்கிற இவ்வுலகில் அவருடைய பிரதிநிதிகளாகச் செயல்படுகிறோம்.

மேலும், தேவனுடைய ராஜ்யம் என்பது அவருடைய அன்பையும் கிருபையையும் பற்றியது. எனவே, அந்த அன்பையும் கிருபையையும் மற்றவர்களிடம் காட்டும்போது, இப்போதே அந்த ராஜ்யத்தை நடைமுறைப்படுத்தி, அதில் பங்கெடுக்கிறோம்.

சர்வதேசவிதிப்படி, தேசியதூதரகங்கள் அந்தந்த நாடுகளின் பிரதிநிதிகளாக இருக்கின்றன; பொதுவாக அவை தங்கள் சொந்த நாட்டிலிருந்து வெகுதூரத்திலுள்ள அயல்நாட்டில் இருக்கும். அதுபோல தேவனுடைய ராஜ்யத்தின் வழிகளை நடைமுறைப்படுத்தும்போது, அந்த ராஜ்யத்தின் நித்திய உண்மைகளை இங்கே காண வழிசெய்கிறோம்; தீமை இறுதியில் அழிக்கப்படும் என்பதைக் காட்டுகிறோம்; மேலும் இப்போதே அதை ருசிக்கிறோம். கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாக, கிறிஸ்துவின் முகவர்களாக நாம் வாழும்போது, அவருடைய அன்பையும் நியாயத்தையும் நம் வாழ்விலும் சபையிலும் நாம் ஊழியம்செய்கிறவர்களின் வாழ்விலும் காணப்படச் செய்யலாம்.

2கொரி 2:16இல் சொல்லப்படும் இரண்டு வாசனைகளுக்குமுள்ள வித்தியாசம் என்ன? இதில் நாம் எந்த வாசனையை வீசுகிறோமென எவ்வாறு அறியலாம்?

# மீதமான ஒரு பணிவிடையாள்

மீதமானவர்கள் என்பதற்கான விளக்கத்தை வெளி 12:1 சொல்கிறது: 'தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள். இயேசுகிறிஸ்துவைக்குறித்துச்சாட்சியை உடையவர்கள். வெளி 14:12. பூலோக வரலாற்றின் கடைசிக்கால மக்களிடம் காணப்படும் தன்மை இது. ஆனால், மீதமான ஒருவர் எவ்வாறு செயல்படுவார், எவ்வாறு பிறருக்குச் சேவைசெய்வார் என்பதற்கு வேதாகமத்தில் உதாரணம் உள்ளது.

**கேள்வி: யாத் 32:1-14இல் மோசேபற்றிச் சொல்லப்படுவதை வாசியுங்கள். இங்கே மோசேக்கும் வெளி 12:17இல் மீதமானவர்களுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை என்ன?**

இஸ்ரவேலர்மேல் கோபங்கொண்டு, அவர்களை அழித்துவிடுவதாகவும், ஆபிரகாமுக்கு தாம் செய்த வாக்குத்தத்தத்தை மோசேக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் சொந்தமாக்கப்போவதாகவும் தேவன் சொல்கிறார். யாத் 32:10. பெரியஜாதியாக்குவேன் என்பதே வாக்குறுதி. ஆனால், மோசே சம்மதிக்கவில்லை. தேவன் தாம் சொன்னது போலச் செய்தால், அது அவரை மோசமானவராகக் காட்டுமென்கிறான். யாத் 32:11-13. தன்னையே பணையம்வைத்துப் பேசுகிறான்.

இஸ்ரவேலர் விடுதலையானதுமுதல் குறைகூறியும், வாக்குவாதம் செய்தும் வந்தார்கள். அப்படியிருந்தும், மோசே தேவனிடம் அவர்களுடைய பாவங்களை மன்னிக்காவிட்டால், 'நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்' என்கிறான். யாத் 32:32. தகுதியில்லாதவர்களுக்காகத் தன்னையே பலிகொடுக்கிற ஒரு வல்லமைக் காட்சி! இரட்சிப்பின் திட்டத்தைக் காட்டுகிற ஒரு காட்சி!

'யாருக்காக இவ்வளவு அதிகமானவற்றைச் செய்யும்படி தேவனுடைய கரங்களில் கருவியாக இருந்தானோ, அவர்கள் மேலிருந்த ஆழ்ந்த அக்கறையாலும் அன்பாலும் அவர்களுக்காக மன்றாடினபோது அவனுடைய பயந்த சுபாவம் மறைந்தது. ஆண்டவர் அவனுடைய மன்றாட்டுகளுக்குச் செவிகொடுத்து, சுயநலமற்ற வேண்டுதலை அங்கீகரித்தார். தேவன் தம் ஊழியக்காரனை சோதித்தார். அவனுடைய விசுவாசத்தையும், தவறுசெய்கிற நன்றியில்லாத ஜனங்கள் மேல் அவனுக்கிருந்த அன்பையும் சோதித்தார். மோசே அந்தச் சோதனையில் வெற்றிபெற்றான். இஸ்ரவேலர்மேல் அவனுக்கிருந்த ஆர்வம் சுயநல நோக்கமுடையதல்ல. தனிப்பட்ட கனத்தைக் காட்டிலும், வல்லமையான ஜாதிக்கு தகப்பனாகிற வாய்ப்பைக் காட்டிலும், தேவன் தெரிந்துகொண்ட ஜனங்களின் செழிப்பை விரும்பினான். அவனுடைய உண்மையும் எளிய இருதயமும் நேர்மையும் ஆண்டவருக்குப் பிடித்திருந்தது. இஸ்ரவேலை வாக்குத்தத்த நாட்டிற்கு வழிநடத்தும் மாபெரும் பொறுப்பை உண்மையுள்ள மேய்ப்பனாக அவனிடம் ஒப்புக்கொடுத்தார்.' - *EGW.*

தவறுசெய்கிறவர்கள்மேல் இரக்கங்காட்ட எவ்வளவு தூரம் முயலவேண்டுமென இதிலிருந்து அறிந்துகொண்டது என்ன?

# ஆத்துமாக்களைத் தேடிச்செல்லுதல்

சமூகசேவை செய்யவேண்டுமா? சுவிசேஷப்பணி செய்யவேண்டுமா? நற்பணிசெய்யவேண்டுமா? சாட்சிபகர வேண்டுமா? நியாயத்திற்காகப் பேசவா? சுவிசேஷஊழியம் செய்யவா? இவ்வாறு சபையில் வாக்குவாதம் எழும்பக்கூடும். ஆனால், இயேசுவின் ஊழியத்தை ஆராய்ந்து, இதுகுறித்த சரியான அறிவிருந்தால், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும் பிறருக்குச் சேவைசெய்வதும் நெருங்கிய தொடர்புடையவை என்பது புரியும்.

'மக்களை அணுகுவதில் கிறிஸ்துவின் பாணி மட்டுமே மெய்யான வெற்றியைத் தரும். மக்களுக்கு நல்லதுசெய்வதற்காக அவர்களோடு இரட்சகர் நெருங்கிப் பழகினார். அவர்கள்மேல் பரிதாபம்கொண்டார். அவர்கள் தேவைகளைச் சந்தித்தார். அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானார். பிறகு, 'என்னைப் பின்பற்றுங்கள்' என்றார்.

'தரித்திரரைத் தூக்கிவிடவேண்டும்; வியாதியஸ்தரைக் கவனிக்க வேண்டும்; துக்கத்திலும் வேதனையிலும் இருப்போருக்கு ஆறுதல் சொல்ல வேண்டும்; அறியாமையில் உள்ளவர்களுக்கு அறிவுபுகட்ட வேண்டும்; அனுபவமற்றோருக்கு ஆலோசனைசொல்லவேண்டும். அழுகிறவர்களோடு அழவேண்டும்; களிகூருகிறவர்களோடு களிகூர வேண்டும்.' - *EGW, MH, p 143.*

நியாயம்செய்தலையும் சுவிசேஷஊழியத்தையும் இயேசு தம் சீடர்களுக்குக் கொடுத்த முதல் ஊழியக்கட்டளையில் காணலாம்: 'பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்.' 'வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய்க் கொடுங்கள்.' மத் 10:7,8.

**கேள்வி: தேவபிள்ளைகளின் நற்கிரியைகளுக்கு உள்ள சாட்சியின் வல்லமைபற்றி 1பேதுரு 2:12; பிலி 2:15,16 வசனங்களில் பேதுருவும் பவுலும் சொல்வது என்ன?**

மக்கள்மேல்அன்புஇல்லாதசுவிசேஷஊழியத்தால்பயனில்லை. சுவிசேஷத்தை வாழ்ந்துகாட்டாமல் அதைப் பிரசங்கிப்பதால் பயனில்லை. 1யோவான் 3:16-18; யாக் 2:16. நம்பிக்கை, விடுதலை, மனந்திரும்புதல், வாழ்க்கைமாற்றம், சுவிசேஷஊழியம் போன்றவை நியாயமுள்ளவர்களாக வாழ்வதற்கான ஒரு வெளிப்பாடாகும்.

தொலைந்தும் வேதனையிலுமுள்ள மக்களை தேவன் நேசிக்கிறாரென உணரும்போதுதான் சுவிசேஷஊழியத்தையும் நியாயத்தையும் செய்ய ஆவலுண்டாகும். தேவன் அந்த அன்பை நம் இருதயங்களில் வளரச்செய்வார். மக்களுடைய தேவைகளைச் சந்தித்து, தேவன் நம்மிடம் ஒப்படைத்துள்ள வளங்களை அவர்களுக்காகப் பயன்படுத்தும் போது, தேவனோடு சேர்ந்து பிரயாசப்படுவோம்.

பிறருக்காக நற்கிரியைகளைச் செய்யும் அதே வேளையில், இரட்சிப்பின் நற்செய்தியையும் அறிவிக்க நாம் என்ன செய்யலாம்?

# திருச்சபைக்குள் கிருபை

தேவனுடைய வழிகளும், விழுந்துபோன மனிதர்களை அவர் அணுகுகிறவிதமும் நலமானவையே என்பதை யோபுவின் உண்மைத் தன்மை எடுத்துக்காட்டுவதாக தேவன் சொன்னார். யோபு 1:8. தம் மக்கள் இந்தப் பூமியில் வாழ்கிற விதத்தைவைத்து தமக்கு நற்பெயர் உண்டாக தேவன் விரும்புகிறார். தம்முடைய ‘பரிசுத்தவான்கள்’மேல் தேவன்வைத்துள்ள இந்த நம்பிக்கை, சபைசமுதாயத்திற்குப் பொருந்துமென்று பவுல் கூறுகிறார்: ‘உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும்பொருட்டாக.’ எபே 3:10.

**கேள்வி: சபையாரைப் பற்றி தேவனுடைய ‘வீட்டார்’ என்று எபே 2:19 சொல்கிறது; இதின் அர்த்தம் என்ன? ஒழுங்கமைக்கப்பட்ட சபையானது செயல்படவேண்டிய விதம்பற்றி இது சொல்வது என்ன?**

எந்தச் சமுதாயமாக, அமைப்பாக இருந்தாலும், அதன் அங்கத்தினர்கள் நடத்தப்படும் விதம்பொறுத்தே அவர்களுடைய அடிப்படை விழுமியங்கள் இருக்கும். தேவனுடைய வீடும் கிறிஸ்துவின் சரீரமும் ஆவியின் சமூகமுமாகிய சபையானது, உயர்தர வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டுள்ளது: ‘தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்; பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது.’ 1கொரி 14:33.

சபையில் நிகழ்கிற அனைத்தையும் தேவனுடைய நியாயமும் கிருபையும் அன்பும் கட்டுப்படுத்தவேண்டும். உள்ளூர்ச் சபை முதல் உலகளாவிய சபை அமைப்பு வரையிலும் தலைவர்கள் தலைமைதாங்கும்விதத்திலும், தீர்மானங்களைச்செய்வதிலும், சபைசமுதாயத்திற்குள் ‘சிறியவர்களில்’ அக்கறைகாட்டுவதிலும் இந்த நியதிகள் அடிப்படையாக இருக்கவேண்டும். அங்கத்தினர்கள்மத்தியில் அவ்வப்போது எழும்பும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் இந்த நியதிகள் உதவவேண்டும். உள்ளுக்குள்ளேயே நியாயமாகவும் மரியாதையாகவும் நடத்தாவிட்டால், வெளியே எவ்வாறு நடத்துவோம்?

சபை நியமிக்கிறவரும் தாராளகுணமுள்ளவராக, எல்லாவற்றையும்விட மனிதர்களை மதிப்பவராக, அநியாயத்தை எதிப்பவராக இருக்கவேண்டும். யாரும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கிற ஓர் இடமாக சபை இருக்கவேண்டும். ஆதிகாலச் சபையினரைப் போல, தங்கள் சபைக்‘குடும்பத்தில்’ உள்ள எளியவர்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் ஆதரிக்கிற சமுதாயமாக சபை இருக்கவேண்டும்.

சபையார் ஒடுக்கப்பட்டவர்களை ஆதரித்தால், சபையாரின் விசுவாசத்தை மற்றவர்கள் காண உதவியாக இருக்கும்: “நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்” என்றார் இயேசு. யோவான் 13:34,35.

# நற்கிரியைகள் செய்ய ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்துங்கள்

மிகச்சிறந்த நோக்கங்களும் ஊக்கங்களும் இருக்கலாம். தேவனுடைய நற்பெயருக்காகப் பிரயாசப்படலாம். ஆனாலும், ஆண்டவருக்காகச் சேவைசெய்வது எளிதானதல்ல. நம் உலகத்தில் வேதனையும் துக்கமும் காணப்படுவதுதான் இதற்குக் காரணம். அதனால்தான் சபைச் சமுதாயம் அவசியமாகிறது. இயேசு தம் சீடர்களை வைத்து இத்தகைய ஒரு சமுதாயத்தை அமைத்திருந்தார். ஊழியத்திற்காக மக்களை அனுப்பினார்; அவர்கள் திரும்பவந்து தங்கள் சாட்சிகளைப் பகிர்ந்து, பிறருக்கு ஆற் றலும் தைரியமும் கொடுத்தார்கள்.

**கேள்வி: எபி 10:23-25இல், 25ம் வசனம் பிரபலமானது. இந்த வசனத்தைப் புரிந்து கொள்ள முந்தைய இரு வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன? 'அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி' எவ்வாறெல்லாம் ஒருவரை ஒருவர் ஊக்குவிக்கலாம்?**

எந்த வேலையானாலும், எந்தப் பணித்திட்டமானாலும் தனித் தனியே வேலைசெய்வதைவிட பலர் சேர்ந்து வேலைசெய்தால் அதிகம் சாதிக்கலாம். கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கும் இது பொருந்தும். ரோமர் 12:3-6. அதில் ஒவ்வொருவருக்கும் ஒரு பணி இருக்கிறது. அந்தப் பணியை நாம் சிறப்பாக, எல்லாரோடும் ஒத்துழைத்துச் செய்யும்போது, நம்முடைய வாழ்க்கையும் பணியும் நித்தியத்திற்கேதுவான மாற்றத்தை உண்டுபண்ணுமென நிச்சயமாக விசுவாசிக்கலாம்.

சரியானதைச் செய்யும்போது, மக்களிலும் அவர்கள் வாழ்விலும் அது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது முக்கியம்தான். ஆனால் விளைவுகள் எப்படியிருந்தாலும் தேவனை நம்பி நாம் செய்ய வேண்டிய பணிகளும் இருக்கின்றன. தரித்திரருக்கு உதவவும், பாதிக்கப்படுவோரைப் பாதுகாக்கவும், ஒடுக்கப்பட்டோரை விடுவிக்கவும், குரலற்றோருக்காகப் பேசவும் பிரயாசப்படும்போது எந்தப் பயனும் உண்டாகாததுபோலத் தெரியலாம். ஆனால், வெற்றியாக அமையப் போகிற இன்றியமையாத ஒரு நோக்கத்திற்காக பிரயாசப்படுகிறோம் என்பதை மறக்கக்கூடாது. 'நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்.' கலா 6:9,10. எபி 13:16ஐயும் பார்க்கவும்.

அதனால்தான் நாம் ஒருவரை ஒருவர் ஊக்குவிக்க அழைக்கப்படுகிறோம். உண்மையோடு வாழ்வது மகிழ்ச்சியானது; சிக்கலானது. நீதியின் தேவனும், நியாயத்தை விரும்பும் நம் சபைச்சமுதாயமும்தான் நமக்கு மிகப்பெரிய ஆதரவுகள். அவர்களுக்கு நேராகத்தான் நாம் மற்றவர்களையும் அழைக்கிறோம்.

மற்றவர்களின் உபத்திரவத்தைப் போக்க தொடர்ந்து பிரயாசப்பட்டு வரும் யாரை உங்களுக்குத் தெரியும்? அந்த நற்கிரியை செய்யும் நபரையோ குழுவையோ ஊக்குவிக்க நீங்கள் என்ன செய்யலாம்?

## மேலும் படிக்க:

'சீடர்கள் செய்த பணியையே நாமும் செய்யவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு நற்செய்தியாளனாக இருக்கவேண்டும். எளியவர்களுக்கு பரிவோடும் மனதுருக்கத்தோடும் ஊழியம்செய்யவேண்டும்; பாடுகளுள்ள மனுகுலத்தின் கஷ்டங்களைத் தணிக்க சுயநலமற்ற ஆர்வத்துடன்முயலவேண்டும்.

'பசியோடிருப்போருக்கு உணவும், வஸ்திரமில்லாதோருக்கு வஸ்திரமும், வேதனையில் உள்ளவர்களுக்கு ஆறுதலும் கொடுக்கவேண்டும். மனமடிந்தவர்களுக்கு உதவிசெய்து, நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையூட்டவேண்டும்.

'பாவியைச் சீர்திருத்துவதில் பட்டயத்தையோ நீதிமன்றத்தையோவிட சுயநலமற்ற ஊழியத்தில் வெளிப்பட்ட கிறிஸ்துவின் அன்புதான் அதிக ஆற்றல்மிக்கது. கடிந்துகொள்ளப்படும்போது கடினப்படுகிற இருதயமானது பெரும்பாலும் கிறிஸ்துவின் அன்பால் இளகிவிடும்.' – *EGW, MH, pp 104,106.*

'அடிமைத்தனம், சாதிப்பிரிவினை, அநீதியான இனப்பாகுபாடுகள், தரித்திரர் ஒடுக்கப்படுதல், கீழ்நிலையிலுள்ளோர் புறக்கணிக்கப்படுதல் போன்றவை கிறிஸ்தவத்திற்கு எதிரான, மோசமான அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றன; இவற்றைப் போக்கடிக்கவே கிறிஸ்துவின் சபையை ஆண்டவர் ஏற்படுத்தியிருக்கிறார்.'

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *உலகத்தில் தேவைகளைச் சந்திக்க பல மக்களும் குழுக்களும் அமைப்புகளும் பிரயாசப்படுகின்றனர். இந்தப் பணியில் எத்தகைய ஆற்றலையும் உட்கருத்துகளையும் வளங்களையும் வழங்கி அட்வென்டிஸ்ட் சபை உதவமுடியும்?*

2 *உங்கள் சபைச் சமுதாயத்தால் நீங்கள் ஊக்கமும் ஆதரவும் பெற்ற அனுபவம் உண்டா? பிறரையும் அதேபோல ஊக்கப்படுத்துவதற்கு அந்த அனுபவத்திலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்ளலாம்?*

3 *'நன்மைசெய்வதில் சோர்ந்துபோகாமலிருக்க' சபைச் சமுதாயத்தின் உதவி தவிர, வேறு என்னென்ன வழிகளில் நீங்கள் ஊக்கமடையலாம்?*

4 *உலகம் முழுவதிலும் இயங்கிவரும் நியாயம், வறுமை சம்பந்தப்பட்ட என்னென்ன திட்டங்களுக்கு தற்சமயம் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை ஆதரவளித்து வருகிறது? திருச்சபையின் இந்தப் பணியில் நீங்களும் எவ்வாறு உதவலாம்?*

**பாடச்சுருக்கம்:** **கிறிஸ்தவர்களாகிய நாம் பிறர் தேவைகளைச் சந்திக்கவும், குறிப்பாக வேதனையிலும் உபத்திரவத்திலும் ஒடுக்கத்திலும் உள்ளவர்களுக்கு உதவவும் அழைக்கப்பட்டுள்ளோம். இந்த விஷயத்தில் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதத்தில் பொறுப்புகள் இருந்தாலும், பிறருக்கு ஊழியம்செய்ய ஒரு சமுதாயமாக முயலும்போது, சபைக்குடும்பமாக நாம் அதிக பயன்மிக்க விதத்தில் செயல்படமுடியும்.**